**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**D041 மொழி வரலாறு –2**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இதழ் குவியா உயிர் எழுத்து எது?
2. மாணவர்கள் என்ற சொல்லைத் தற்காலத்தமிழில் எவ்வாறு கூறுகின்றனர்?
3. புணர்ச்சி என்றால் என்ன?
4. ஒலிசார் எழுத்து முறைக்கான ஒரு மொழியைக் கூறுக.
5. ஆக்க வினையடை விகுதிகள் யாவை?
6. சீவக சிந்தாமணியில் மட்டும் வழங்கும் முன்னிலைப் பெயர் யாது?
7. உடைமை வேற்றுமை என்பது எந்த வேற்றுமையைக் குறிக்கும்?
8. வினைச்சொல் என்பது எதைக் குறிக்கிறது?
9. சங்க காலத்தில் வழங்கிய வினையடைகளில் எவையேனும் மூன்றனைக் குறிப்பிடுக.
10. எழில் என்ற சொல் உணர்த்தும் எவையேனும் இரு பொருட்களைக் கூறுக.
11. குட்டி என்ற சொல் எவ்வெவற்றின் இளமைப் பெயர்?
12. தமிழில் உள்ள கூட்டொலிகள் யாவை
13. கைவேல் என்ற சொல் செய்யுளில் எவ்வாறு எழுதப்பட்டுள்ளது?
14. கிளைமொழி என்பதைத் தொல்காப்பியர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
15. குடநாட்டார் தந்தை என்ற சொல்லை எவ்வாறு வழங்கினர்?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. எவ்வாறான காரணங்களால் ஒரு மொழியில் மாற்றம் ஏற்படுகிறது?
2. காலப்பெயர் மாற்றத்திற்கான சான்று தருக.
3. தமிழ்நாட்டில் 7ஆம், 8ஆம் நூற்றாண்டில் எத்தனை வகையான எழுத்துகள் இருந்தன? அவை யாவை?
4. வேற்றுமைப்பொருள் உணர்த்தும் முறை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. தள்ளு என்னும் துணைவினை தரும் பொருள்களைக் குறிப்பிட்டுச் சான்று காட்டுக.
6. புல் என்ற சொல் எவ்வாறு தென்னை, பனை முதலியவற்றைக் குறிக்கும்?
7. தமிழில் ஐ, ஔ என்னும் கூட்டொலிகள் பற்றிய இருவேறு கருத்துகள் யாவை?
8. மெய் ஒலிகள் என்றால் என்ன?

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) எழுத்துக்கும் மொழிக்கும் உள்ள உறவை ஆராய்க.

(அல்லது)

(ஆ) தமிழில் சொல்லெழுத்து மாற்ற வரலாறு குறித்து எழுதுக.

2. (அ) மூவிடப் பெயர்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சங்க காலத்தில் சொல்லுருபுகள் குறித்து எழுதுக.

3. (அ) சொற்பொருளின் வகைப்பாடுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மெய் ஒலிகளின் பாகுபாடுகளை விளக்குக.

***